
View metadata, citation and similar papers at core.ac.uk
brought to you by CORE
provided by UUM Repository

| MediaTitle | Malaysian Nanban | | |
|---|---|---|---|
| Date | 30 May 2013 | Language | Tamil |
| Circulation | 60,000 | Readership | 252,000 |
| Section | News | Color | Full Color |
| Page No | 6 | ArticleSize | 1775 cm² |
| AdValue | RM 9,467 | PR Value | RM 28,400 |



# கடனாளியாகும் உயர்கல்வி கற்கும் இளைய தலைமுறை

மெரித்தோகிராசி (Meritokrasi) எனப்படும் தகுதிக்கேற்ற உயர்கல்வி வாய்ப்பு முறையும், தனியார் கல்லூரிகளின் வழி உயர் கல்வி வாய்ப்புகளைத் தனியார் மயப்படுத்தியதும் நமது இந்தியர்களின் கல்வி மேம்பாட்டிற்கு அடித்தளம் அமைக்கும் என்ற நம்பிக்கையில் மண் விழுந்ததுதான் மிச்சம் என பல்லாயிரக்கணக்கானவர்களின் எண்ணமாக இருக்கின்றது என்பதை ஏவுகணை கூற வேண்டியதில்லை. 1980ஆம் ஆண்டுகளில் உயர் கல்வியைப் பெறுவதற்கான கட்டணங்கள் செலுத்தக்கூடிய அளவிலும், கடனில்லாமல் கல்வியைத்

பட்டியல் : 1

**கடன் தொகைகளை உபகாரச் சம்பளமாகப் பெற்ற மாணவர்கள்**

| இனம் | எண்ணிக்கை |
|---|---|
| சீனர் | 8818 |
| மலாய்க்காரர் | 2347 |
| இந்தியர் | 456 |
| சபா(பூமிபுத்ரா) | 50 |
| சரவாக் பூமிபுத்ரா | 34 |
| மற்றவர்கள் | 59 |
| மொத்தம் | 11,764 |

தொடர்வதற்கு உபகாரச் சம்பளங்களை பல இயக்கங்களும், நல்லுள்ளங்களும் இருந்ததை மறக்க முடியாது. ஆனால், இன்றைய நிலையில் அரசு உயர் கல்வி நிலையங்களிலும் சரி, தனியார் உயர் கல்வி நிலையங்களிலும் சரி, படிப்பை முடித்தவுடனே மாணவர்களின் முதுகில் கடனாக மிகப்பெரிய தொகையைச் சுமக்க வேண்டிய அவல நிலையைக் காண முடிகின்றது. மலேசிய இந்தியர்கள் சொத்துடைமையில் 10 விழுக்காட்டிற்கும் குறைவான பங்கையே வைத்திருக்கும் நிலையில் உயர்கல்வி கடனுதவி வாரியத்திடம் (Perbadanan Tabung Pendidikan Tinggi Nasional) ஏறக்குறைய 3 கோடி வெள்ளியை கடன்களாகப் பெற்றுள்ளோம் என்பதனை எவ்வாறு விவரிப்பது என்றே தெரியவில்லை.

## பிடிபிடிஎன்னின் வரலாறு

தேசிய உயர் கல்வி வாரியம் (PTPTN) 1997ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ஆம் நாள் அமைக்கப்பட்டது. உயர் கல்வி நிதி வாரியத்தின் சட்ட விதிகளுக்கு ஏற்ப அமைக்கப்பட்டது Akta 556 அல்லது சட்டவிதிகள் 556 என்று அழைக்கப்பட்ட புதிய சட்டவிதிகளுக்கு உட்பட்டு பிடிபிடிஎன் உயர்கல்வி நிதி வாரியம் அமைக்கப்பட்டது. பிடிபிடிஎன்னின் முழுமையான செயல்பாடுகள் தொடர்பாக அப்போதைய கல்வி அமைச்சராக இருந்த தற்போதைய பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப் துன் ரசாக்கின் தலைமையில் உருவாக்கம் பெற்றதை அறிய முடிகின்றது. பிடிபிடிஎன்னின் தலைமையகம் சேங் பெர்டானா கட்டடத்தில் அமையப் பெற்றது. 1999ஆம் ஆண்டு ஜூலை 1ஆம் நாள் தொடங்கி பிடிபிடிஎன் எனப்படும் உயர்கல்வி கடனுதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மூன்று முக்கியமான செயலாக்கங்களை வெற்றிபெறச் செய்வதற்கான நோக்கத்தையும் பிடிபிடிஎன் செயலகம் கொண்டிருந்தது.

- உயர் கல்வி பயில்வதற்கான கடனுதவிகளை வழங்கவும், கொடுக்கப்பட்ட கடன்களை வசூலிக்கும் பொறுப்பு.
- மலேசிய மக்களிடையே உயர்கல்வி பயிலும் பிள்ளைகளுக்கான சேமிப்புத் திட்டத்தை வலியுறுத்தும் பொறுப்பு.
- உயர் கல்வி நிதி தொடர்பாக எழும் மற்ற பிரச்சினைகளைக் களையும் பொறுப்பு.

மேற்கண்ட பொறுப்புகளைச் செவ்வனே ஆற்ற ஒரு தனி செயலகத்தையும் ஊழியர்களையும் கொண்ட தன்னிச்சையான இயக்கமாக இன்றுவரை செயல்பட்டு வருகின்றது.

## பிடிபிடிஎன் நிதி வாரியம் வழங்கும் கடன் வசதிகள்

எஸ்பிஎம் (SPM) தேர்வினை எழுதிய மாணவர்கள் உயர்கல்வியினைத் தொடர்வதற்கு பல வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்க உயர்கல்வி நிலையங்களிலும் தனியார் கல்வி மையங்களிலும் பதிந்து கொள்ளும் மாணவர்களுக்கு பிடிபிடிஎன் கடன் வசதிகளை கல்லூரி அல்லது பல்கலைக் கழக நிர்வாகமே ஏற்பாடுகளைச் செய்து தரும் வாய்ப்புகளும் வழங்கப்பட்டன. பின்வரும் கல்வித் தகுதிகளைப் பெறுவதற்காக மாணவர்கள் உயர்கல்வி நிதி வாரியத்திடமிருந்து கடன்களைப் பெற முடியும்.

- சான்றிதழ் கல்வி படிப்பு (Certificate Couses)
- ஆயத்த நிலை கல்வி (Foundation Studies)
- டிப்ளோமா கல்வி (Diploma Programs)
- அட்வான்ஸ் டிப்ளோமா (Advance Diploma)
- பட்டப் படிப்பு கல்வி (Degree Programs)

மேற்கண்ட கல்வியைப் பெறுவதற்கான விண்ணப்பத்தைச் செய்பவர்கள் படிப்பிற்குத் தகுந்தவாறு கடனுதவியைப் பெற முடியும். வெ.5000,00 முதல் வெ.80,000 வரையிலான கடனுதவியைப் பெறுவதற்கான வசதிகளும், உயர்கல்வியின் கட்டணத்தைப் பொறுத்து கடனுதவித் தொகையும் வழங்கப்படும்.

| INSTITUSI | PERINGKAT PENGAJIAN | JURUSAN PENGAJIAN | JUMLAH PEMBIAYAAN SETAHUN | | |
|---|---|---|---|---|---|
| | SEPENUH MASA | | | | |
| IPTS | Ijazah Pertama | Sains | Maksima RM16,500 | Maksima RM13,500 | Maksima RM 10,500 |
| | | Sastera | Maksima RM16,000 | Maksima RM13,000 | Maksima RM 10,000 |
| | Diploma | Sains/Sastera | Maksima RM8,000 * | Maksima RM8,000 * | Maksima RM8,000 * |
| Universiti/Kolej Perubatan & Sains Bersekutu | Ijazah Pertama (MBBS/MD) | Perubatan | Maksima RM 30,000 * | Maksima RM 30,000 * | Maksima RM 30,000 * |
| | Ijazah Pertama (Perubatan & Sains Kesihatan Bersekutu) | Farmasi, Pergigian & Perubatan | Maksima RM 20,000 * | Maksima RM 20,000 * | Maksima RM 20,000 * |
| | Diploma (Perubatan & Sains Kesihatan Bersekutu) | Farmasi, Pergigian & Perubatan | Maksima RM 15,000 * | Maksima RM 15,000 * | Maksima RM 15,000 * |
| | SEPARUH MASA | | | | |
| UNITEM/ Wawasan Open University/UNITAR/ Asia E University | Ijazah Pertama | Sains | - | - | Maksima RM4,200 ** |
| | | Sastera | - | - | Maksima RM4,200 ** |
| | Diploma | Sains/Sastera | - | - | Maksima RM3,700 ** |

Nota:
* Jumlah pembiayaan ditetapkan atas yuran pengajian sebenar dan kos sara hidup berdasarkan pendapatan ibu/bapa/penjaga tetapi tidak melebihi jumlah maksima yang ditetapkan.
** Jumlah pembiayaan ditetapkan atas yuran pengajian sahaja dan tidak melebihi jumlah maksima.

*Maklumat adalah tertakluk kepada sebarang perubahan yang ditetapkan oleh PTPTN*

**JUMLAH PEMBIAYAAN PENDIDIKAN PTPTN**

| INSTITUSI | PERINGKAT PENGAJIAN | JURUSAN PENGAJIAN | JUMLAH PEMBIAYAAN SETAHUN | | |
|---|---|---|---|---|---|
| | SEPENUH MASA | | | | |
| | | | PENUH | SEBAHAGIAN | YURAN |
| IPTA & POLITEKNIK | Doktor Falsafah | Sains/Sastera | Maksima RM26,000 * | Maksima RM26,000 * | Maksima RM26,000 * |
| | | Farmasi, Pergigian & Perubatan | Maksima RM26,000 * | Maksima RM26,000 * | Maksima RM26,000 * |
| | Sarjana | Sains/Sastera | Maksima RM10,000 * | Maksima RM10,000 * | Maksima RM10,000 * |
| | | Farmasi, Pergigian & Perubatan | Maksima RM10,000 * | Maksima RM10,000 * | Maksima RM10,000 * |
| | Kursus Profesional | Sains/Sastera | Maksima RM6,000 * | Maksima RM6,000 * | Maksima RM6,000 * |
| | Ijazah Pertama | Sains | RM7,000 | RM3,500 | RM2,100 |
| | | Farmasi, Pergigian & Perubatan | RM7,000 | RM3,500 | RM2,300 |
| | | Sastera | RM6,500 | RM3,000 | RM1,100 |
| | Diploma Lanjutan | Sains | RM7,000 | RM3,500 | RM2,100 |
| | | Sastera | RM6,500 | RM3,000 | RM1,100 |
| | Diploma | Sains/Sastera | RM5,000 | RM2,500 | RM1,000 |
| | SEPARUH MASA / JARAK JAUH | | | | |
| | Doktor Falsafah | Sains/Sastera | - | - | Maksima RM26,000 ** |
| | | Farmasi, Pergigian & Perubatan | - | - | Maksima RM26,000 ** |
| | Sarjana | Sains/Sastera | - | - | Maksima RM10,000 ** |
| | Kursus Profesional | Sains/Sastera | - | - | Maksima RM6,000 ** |
| | Ijazah Pertama | Sains/Sastera | - | - | Maksima RM6,500 ** |
| | Diploma | Sains/Sastera | - | - | Maksima RM5,000 ** |

## பிடிபிடிஎன் கடனுதவியும் தனியார் கல்லூரிகளின் வளர்ச்சியும்

பிடிபிடிஎன் கடனுதவி அறிமுகம் கண்ட பின் தனியார் கல்லூரிகளின் வளர்ச்சியிலும் எண்ணிக்கையிலும் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. ஏற்கெனவே மாணவர்களிடம் கல்வி கட்டணங்களை வசூல் செய்து கல்லூரிகளும் உயர்கல்வி மையங்களும் இயங்கி வந்த நிலையில் பிடிபிடிஎன் கடனுதவி பழம் நழுவி பாலில் விழுந்த நிலையை தனியார் உயர் கல்வி நடத்துனர்களுக்கு ஏற்படுத்தின. தனியார் உயர்கல்வி நிலையங்களை அமைப்பதிலும், கண்காணிப்பதிலும் மிகப்பெரிய இடைவெளிகள் இருந்ததை யாரும் கவனிக்கவில்லை. அதன் விளைவுகளாக.

- புதிய – புதிய தனியார் உயர் கல்வி நிலையங்கள் உதயமாகின.
- தேவைக்கேற்ற வகையில் இல்லாத பயிற்சிகள் அங்கீகரிக்கப்பட்டன.
- மலேசியாவின் வேலைத் தேவைக்கேற்றவாறு பயிற்சிகள் ஒருங்கிணைக்கப்படவில்லை.
- முழுமையான வசதிகளோடு உயர்கல்வி நிலையங்கள் அமையவில்லை.

( கடை வீடுகளுக்கு மேல் மாடி, திடல், விளையாட்டு மைதானங்கள் இல்லாமை)

- மாணவர்களின் குறைவான தேர்ச்சியிலும் உயர்கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளும் நடைமுறை.
- கல்வியை முடித்த பின்னர் முறையான அங்கீகாரமும் சான்றிதழ்களோ வழங்காத நிலை.

பிடிபிடிஎன் கல்வி கடனுதவியின் வழி பயன்பெற்ற இந்திய மாணவர்களை விட அதிகமான துன்பங்களையும் கடனாளியாக நடமாடும் சூழலையும் மட்டுமல்லாமல் கருப்புப் பட்டியலிலும் (Black List) இடம் பெற்றுள்ளவர்கள் பலரைக் காண முடியும்.

## கல்விக் கடனுதவியால் எதிர்மறை தாக்கங்கள்

மலேசிய இந்திய மாணவர்களில் ஒரு பகுதியினர் நன்கு திட்டமிட்டு உயர்கல்வி வாய்ப்புகளைத் தேடி பயனடைந்துள்ளனர் என்பதை மறுக்க முடியாது. நடுத்தர குடும்பத்தில் உள்ள இந்திய மாணவர்களுக்கு பிடிபிடிஎன் கடனுதவியின் மூலம் டிப்ளோமா, பட்டப்படிப்புகளைப் பூர்த்தி செய்து இன்றைய நிலையில் நல்ல நிலையில் வாழ்ந்தும் வருகின்றனர். இவர்களைப் போன்றவர்களை ஏவுகணை பாராட்டுவதோடு வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கிறது.

அரசாங்கம் ஏற்படுத்தித் தருகின்ற வாய்ப்புகளையும், வசதிகளையும் முழுமையாகவும் அறிவுப்பூர்வமாகவும் பயன்படுத்தாத நிலையில்தான் இந்திய மாணவர்கள் குறிப்பாக உயர்கல்வி படித்த மாணவர்கள் பெரும் பிரச்சினைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

2012ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ஆம் நாள் ஹரியான் மெட்ரோ பத்திரிகையில் வந்த செய்தி 132,800 மாணவர்கள் பிடிபிடிஎன் கடன் தொகையை திரும்பச் செலுத்தாததால் கருப்புப் பட்டியலில் (Black List) இணைப்பதற்கான கடன்களை அனுப்பியுள்ளதாக வெளிவந்தது. பெயர்களைக் கருப்புப் பட்டியலில் இடம்பெறச் செய்வது ஒன்றும் பெரியதல்ல என்று நினைத்தால் மிகப் பெரிய தவறு என்பதை சாதாரண நிலையில் உள்ளவர்களும் அறிய முடியும். 132,800 பேர்களில் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக இருந்ததை உணர முடிந்தபோது மேலும் வேதனையை ஏற்படுத்தியது.

பிடிபிடிஎன் கடனுதவியை வழங்கும் செயல் நடவடிக்கைகளுக்குப் பிறகு தனியார் உயர் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் கட்டணங்கள் கிடுகிடுவென உயர்வு கண்டன. பிடிபிடிஎன் கடன்களுக்கு முன்னர் டிப்ளோமா தகுதியைப் பெறும் கல்வி வெ.15,000 முதல் வெ.20,000 வரை மட்டுமே இருந்த நிலை பிடிபிடிஎன் கடனுதவிக்குப் பிறகு வெ.30,000 முதல் வெ.50,000 வரை இரண்டு மடங்காக உயர்ந்தது. பிடிபிடிஎன் கடனுதவியால் குறைந்த கட்டணத்தில் கல்வி பெறும் கனவு கலைந்து போனதுதான் மிச்சம். அரசாங்கமோ அல்லது கல்வி அமைச்சோ கட்டணங்களின் உயர்வு தொடர்பாக ஏதும் நடவடிக்கை எடுத்ததாகவும் தெரியவில்லை.

அரசாங்கத்திடமிருந்து பிடிபிடிஎன் கடனுதவிகளை தனியார் உயர் கல்வி நிலையங்கள் பெறுவதற்காக அரசியல்வாதிகளும், அவர்களின் வாரிசுகளும், நண்பர்களும் தனியார் கல்லூரிகளில் அங்கத்துவம் பெற்ற சம்பவங்களும் நிகழ்ந்தன. எனவே, கல்வி கட்டண உயர்வு தொடர்பான சம்பவங்கள் பெரிதுபடுத்தவில்லை என்றே கூற வேண்டும். பொதுவாகவே மலேசிய இந்தியர்களில் பெரும்பாலோர் பிள்ளைகளின் உயர் கல்விக்கென சேமித்து வைக்கும் பழக்கம் இல்லாத நிலையில் உயர் கல்வி கடனுதவியைப் பெறுவதற்கு முன் யோசிப்பதற்கு ஒன்றுமில்லாத நிலையே இருந்து வந்ததையும் அறிய முடியும்.




## பிடிபிடிஎன் கடனும் இந்திய மாணவர்களும்

குறைவான கல்வித் தகுதிகள் இருந்தாலும் தனியார் கல்லூரிகளில் படிக்க முடியும் என்ற எதிர்மறையான சித்தாந்தம் பள்ளிகளில் இந்திய மாணவர்களின் நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தின என்றால் மிகையில்லை. சவால்மிக்க மாணவர்களாகவே பள்ளிகளில் இந்திய மாணவர்கள் இன்றும் இருந்து வருவதை ஏவுகணை உணர்ந்திருக்கின்றது. கடன் வாங்கித்தானே உயர்கல்வியைப் படிக்கின்றோம் என்ற எண்ணம் கொஞ்சமும் இல்லாத நிலையில் உயர்கல்வி நிலையங்களிலும் இந்திய மாணவர்கள் நன்கு கல்வி கற்பதில்லை என்பதை ஏவுகணை நிரூபிக்க முடியும்.

பிடிபிடிஎன் கடன் தொகை தொடர்பாகவும் வசதிகள் தொடர்பாகவும் எதிர்க்கட்சியினர் கொண்டிருந்த அதிருப்தியான எண்ணங்களுக்கு எதிராக அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன. பிடிபிடிஎன் கடன்களுக்கான வட்டி விகிதம் தொடக்கக் காலங்களில் 4 விழுக்காடாகவும் பின்னர் 3 விழுக்காடாகவும் குறைக்கப்பட்ட பின்னர் இறுதியாக 1 விழுக்காடாக குறைக்கப்பட்டது. இந்த நடவடிக்கைக்குப் பிறகு அரசாங்கம் பட்டப் படிப்பு கல்வியை மேற்கொண்டுள்ள பிடிபிடிஎன் கடன்களைப் பெற்றவர்கள் முதல் நிலையில் (First Class Hons) பெறும் நிலையில் பெறப்பட்ட கடன் தொகை முழுமையாக உபகாரச் சம்பளமாக மாற்றப்படும் என்று அறிவிப்பினைச் செய்தது. அதன்படி 2011 ஆம் ஆண்டு 11,764 மாணவர்களுக்கு பிடிபிடிஎன் கடன் தொகை உபகாரச் சம்பளமாக மாற்றப்பட்டது. அவற்றின் வழி பயனடைந்த இந்திய மாணவர்களின் எண்ணிக்கை வெறும் 456 மட்டுமே. (பட்டியலைக் காண்க)

பட்டியல் : 1

பெரித்தா ஹரியான் 11-4-2012

## ஏழைச் சமூகம் ஏழையாகிப் போகலாமா?



ஏற்கெனவே, 56 ஆண்டுகளாக சமூகப் பொருளாதார பின்னடைவுகளாலும், இன ஒதுக்கல் கொள்கைகளாலும் பின்தங்கிய சமூகமாகவே இந்திய சமூகம் விளங்கி வருவதை அனைவரும் உணர்ந்திருக்கின்றோம். மலேசிய நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 7 விழுக்காட்டிற்கும் குறைவான எண்ணிக்கையைப் பெற்றுள்ள நம்முடைய இளைய தலைமுறை சுமார் 3 கோடி வெள்ளி கடன் தொகையைப் பெற்றிருப்பது ஆரோக்கியமான பொருளாதார மேம்பாட்டினை ஏற்படுத்துவதில் சிக்கலை ஏற்படுத்தும் என்பதே ஏவுகணையின் சிந்தனையாகும்.



நடந்து முடிந்த நாட்டின் 13ஆவது பொதுத் தேர்தலின்போது எதிர்க்கட்சியினரின் தேர்தல் கொள்கை அறிக்கை (Manifesto) உயர் கல்வி கடனுதவி பிடிபிடிஎன்னை முற்றாகத் தீர்க்கப்படும் எனக் கூறியதன் பலனாக பெரும்பாலான இளைஞர்கள் ஒட்டுமொத்தமாக எதிர்க்கட்சியினருக்கு வாக்குகள் செலுத்தியதைக் காண முடியும். மலேசிய அரசாங்கம் உயர் கல்வியினை இலவசமாக்க வேண்டும் என்பதே உயர்கல்வி நிலையங்களில் கல்வி பயின்று வரும் மாணவர்களின் ஏக்கமாகும். ஒரே நாளில் ஒட்டுமொத்த மலேசியர்களின் கவனத்தைப் பெற்ற குமாரி பவானியின் போராட்டமும் அதுவாகத்தான் அமைந்திருந்ததை ஏவுகணை உணர்ந்திருக்கின்றது.

## பிரதமருக்கு விண்ணப்பம்

மலேசிய இந்திய சமூகம் கடந்த 56 ஆண்டுகளாக நலிவுற்ற நிலையில் இருப்பதை உணர்ந்து இந்தியர்களின் நலன்களை மேம்படுத்துவதற்கான முயற்சியாக பிரதமர் துறை துணையமைச்சர் ஒருவரை நியமித்துள்ள நிலையின் வழி உணர முடிகின்றது. அவ்வகையில் மலேசிய இந்திய மாணவர்களில் பிடிபிடிஎன் கடனுதவியைப் பெற்றுள்ள வெ.3,000க்கும் குறைவான வருமானம் பெறுபவர்களின் கடன் தொகையினை முழுமையாக உபகாரச் சம்பளமாக மாற்ற வேண்டும் என்ற பரிந்துரையை மலேசிய இந்தியர்களின் சார்பாக ஏவுகணை முன் வைக்கின்றது. இதன்வழி ஓரளவு கடன் தொகையினால் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் உயர்கல்வி பெற்ற மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என ஏவுகணை நம்புகின்றது.

## ஏவுகணையின் வேண்டுகோள்

தாய் வாத்து நடந்து போகும் வழியில் தவறி குளத்தில் விழுந்துவிட்டால் பின்னால் வரும் அனைத்து குஞ்சுகளும் குளத்தில் விழுவது போல் இல்லாமல் இனியும் பிள்ளைகளின் உயர்கல்வி தொடர்பாக முழுமையான விவரங்களைப் பெற்ற பின்னரே முடிவினை எடுக்க வேண்டும் என்பதே ஏவுகணையின் வேண்டுகோளாகும். இதனிடையே, தனியார் உயர்கல்வி நிலையங்கள் சில அரசாங்க பல்கலைக் கழக முத்திரைகளைப் பயன்படுத்தி வீடுகளுக்கே பல்கலைக் கழக வாய்ப்பினை அனுப்பி வைத்து தங்களின் கல்லூரிகளில் இணைத்து கொள்ள ஏற்பாடுகள் செய்து இந்திய மாணவர்களை ஏமாற்றும் நடவடிக்கைகளையும் முறியடிக்க வேண்டும். மேலும் எஸ்பிஎம் மாணவர்களின் விவரங்களைத் தனியார் உயர் கல்வி நிலையங்களுக்கு விற்பனை செய்யும் பள்ளிகள், மாவட்ட கல்வி அலுவலகம், மாநில கல்வி இலாகா அல்லது கல்வி அமைச்சின் பிரிவுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தையும் உணர வேண்டும். ஏமாறுபவர்கள் உள்ளவரை ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். என்பது ஆன்றோர் மொழியாகும். இனியும் நாம் ஏமாறும் சமுதாயமாக வாழ வேண்டிய அவசியம் இல்லை என்பதை உணர வேண்டிய அவசியம் உள்ளதை அறிந்து தெளிந்த / தெளிவடைந்த சமூகமாக வாழ வேண்டும் என வேண்டி விடை பெறுகின்றோம்.

ஏவுகணை குழுவினர்....

Powered by: MediaBanc
Be informed